# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 08 | கர்நாடக சங்கீதம் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி - I

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. லலிதகலைகளில் மேன்மையானது
1) நாதம் 2) நர்த்தனம் 3) சங்கீதம் 4) ஸ்ருதி

02. சங்கராபரண இராகத்தின் மேள எண்
1) 15 2) 28 3) 29 4) 22

03. அப்பியாசகான வரிசைகள் பாடப்படும் இராகம்
1) மாயாமாளவகௌளை 2) சங்கராபரணம் 3) பிருந்தாவனசாரங்கா 4) கல்யாணி

04. ஸ்ருதியில் கூடி ஒலிக்கும் ஸ்வரம்
1) கோமளஸ்வரம் 2) மென்ஸ்வரம் 3) தீவிரஸ்வரம் 4) குறைஸ்வரம்

05. “கணநாதா குணம் நீதா” என்ற சஞ்சாரி கீதத்தை இயற்றியவர்
1) T.V பிச்சையப்பா 2) வீரமணி ஐயர்
3) யோகர்ஸ்வாமிகள் 4) கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

06. மலஹரி இராகத்தின் ஆரோகண, அவரோகணம்
1) ஸரிமபதஸ் - ஸ்தபமகரிஸ 2) ஸரிமபநிஸ் - ஸ்நிதபமகரிஸ
3) ஸரிகமபதஸ் - ஸ்தபகரிஸ 4) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ

07. தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்காத உருப்படி
1) கீர்த்தனை 2) கீதம் 3) ஸ்வர வரிசை 4) வெண்பா

08. ஒரு அலங்காரம் இரண்டாம் காலம் பாடும்போது எடுத்துக்கொள்ளும் ஆவர்த்தனங்கள்
1) |o 2) 5 3) 12 4) 2 ½

09. ஆதி தாளத்தின் அங்க அடையாளம்
1) o$|_4$ 2) $|_4$ 3) |oo 4) $|_4$oo

10. ஸ்வரம் ஒலிக்கும் இடம்
1) தாது 2) ஸ்வரதாளம் 3) மாது 4) கோவை

11. பின்வருவனவற்றுள் கிராமிய இசைக்கருவி அல்லாதது
1) பறை 2) உடுக்கு 3) டொல்கி 4) மிருதங்கம்

12. ஸாரிகமாபாதநீ இதில் வரும் நெடில் ஸ்வவரங்களின் எண்ணிக்கை
1) 5 2) 4 3) 3 4) 6

13. ஸ்வரங்கள் ஸ்ருதியில் படிப்படியாக உயர்ந்து செல்வது
1) அவரோகணம் 2) அமரோசை 3) இறக்கம் 4) ஆரோகணம்

14. ரிம| பதமப|| என்ற ஸ்வரத் தொகுதிக்குரிய சாகித்யம்
1) குணம்நீதா 2) சிவகுமரா 3) சித்தி விநாயகா 4) சரணம் சரணம்

15. ஸ்ரிகம் என்பது குறிக்கும் ஸ்தாயி
1) மந்திரஸ்தாயி 2) நீசஸ்ஸ்தாயி 3) சமஸ்தாயி 4) தாரஸ்தாயி

16. குழந்தை பிறந்தவுடன் பாடப்படும் பாடல்
   1) மருத்துவிச்சிப்பாடல் 2) தாலாட்டுப்பாடல் 3) விளையாட்டுப்பாடல் 4) ஏற்றப்பாடல்

17. லகுவின் செய்கைமுறை
   1) ஒரு தட்டும் வீச்சும் 2) ஒரு தட்டும் 3 விரல் எண்ணிக்கையும்
   3) ஒரு தட்டும் விரல் எண்ணிக்கையும் 4) ஒரு தட்டு மட்டும்

18. அனாகதநாதம் என்பது
   1) இயற்கைநாதம் 2) பாடும் சங்கீதம் 3) வாத்ய நாதம் 4) செயற்கைநாதம்

19. பெரியபுராணம் பாடப்படும் இராகம்
   1) மோகனம் 2) மாயாமாளவகௌளை 3) மத்தியமாவதி 4) கல்யாணி

20. இயற்கையாகவே ரஞ்சனையைக் கொடுக்கும் த்வனி
   1) நாதம் 2) ஸ்வரம் 3) ஸ்ருதி 4) மெல்லிசை

(20 x 2 = 40 புள்ளிகள்)

**பகுதி - II**

❖ **முதலாம் வினா உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 1) நீர் கற்ற அப்பியாசகான உருப்படிகளைத் தருக. (4 புள்ளிகள்)
   2) அப்பியாசகான உருப்படிகளைக் கற்றதனால் கிடைத்த நன்மைகள் எவை? (4 புள்ளிகள்)
   3) மெல்லிசைப் பாடல்களைக் கேட்டு இரசிப்பதன் மூலம் ஏற்படும் உணர்வுகள் எவை? (3 புள்ளிகள்)
   4) மெல்லிசைப் பாடலைப் பாடும் போது பயன்படுத்தக்கூடிய இசைக்கருவிகள் 4 தருக. (4 புள்ளிகள்)

02. 1) நீர் கற்ற ரூபகதாள அலங்காரத்தின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர், ஆரோகணம், அவரோகணம் என்பவற்றைத் தருக. (5 புள்ளிகள்)
   2) ரூபக தாள அலங்காரத்தினை தாள அங்க அடையாளங்களுடன் பிழையற எழுதுக. (10 புள்ளிகள்)

03. 1) ஸ்வரம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   2) ப்ரக்ருதி ஸ்வரத்தின் வேறுபெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)
   3) ப்ரக்ருதி ஸ்வரத்தின் வேறுபெயர்களைத் தருக. (4 புள்ளிகள்)
   4) ப்ரக்ருதி ஸ்வரங்கள் எவை? (2 புள்ளிகள்)
   5) விக்ருதி ஸ்வரம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   6) விக்ருதி ஸ்வரங்கள் எவை? (3 புள்ளிகள்)

04. 1) நாட்டார் பாடல் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
   2) நாட்டார் பாடலுக்குரிய வேறுபெயர்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
   3) நாட்டார் பாடலின் வகைகளைத் தருக. (4 புள்ளிகள்)
   4) நாட்டார் பாடல் பாடப்படும் இராகங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
   5) மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பிரதேசங்களில் பாடப்படும் நாட்டார் பாடலை எவ்வாறு அழைப்பர் (2 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) திரியாங்கம்
   2) நிபந்தம்
   3) மெல்லிசை

(5 x 3 = 15 புள்ளிகள்)